**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.77/2019**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : ஜெயமுருகன் | **Caste** | : | |
| **Father's Name** | : தங்கத்துரை | **Calling** | : | கூலி |
| **Village** | : கொடைரோடு | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **53** |
| | | **Dated** | : | **29.07.2025** |

**29.07.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–5 **திரு.ஜெயமுருகன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.7** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1முதல் 3 வரை எதிரிகள் ஆஜர்.**
**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் கொடைரோட்டில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 29.10.2017ந்தேதி நானும் பிரபாகரனும் வத்தலக்குண்டு செல்வதற்கு முன்பு காலை 04.30 மணியளவில் வத்தலக்குண்டு பைபாஸ் பாலத்திற்கு அருகில் உள்ள கருப்பசாமி கோவிலில் சாமி கும்பிட்டு கொண்டிருந்த போது ஒரு டாடா சுமோ கார் வந்தது. அதிலிருந்து மூன்று நபர்கள் இறங்கினார்கள். சிறிது நேரத்தில் திண்டுக்கல் இரயில்வே போலிஸ் அங்கு வந்தார்கள். அங்கு வந்து அவர்களிடம் பேசினார்கள். அவர்களை காருடன் அழைத்து சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. (அத்தாட்சியில் உள்ள முதலாவது

கையொப்பம் மட்டும் அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார்என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஏழாம் வகுப்பு படித்துள்ளேன். என்னை போலிசார் எப்போது எங்கே வைத்து விசாரித்தார்கள் என்றால் சாமி கும்பிடும் இடத்தில் பெண் காவலர் விசாரித்தார். அதன் பின்பு என்னை யாரும் விசாரிக்கவில்லை. எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.நான் முதல் விசாரணையில் சொன்னதை போலிசார் சொல்லி தான் சொன்னேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.07.31 10:18:41 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.77/2019**

**Prosecution Witness : 8**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாஸ்கரன் | **Caste** | : |
| **Father's Name** | : வாசுதேவன் | **Calling** | : சார்பு ஆய்வாளர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 55 |
| | | **Dated** | : 29.07.2025 |

**29.07.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–9 **திரு.பாஸ்கரன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.8** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1முதல் 3 வரையுள்ள எதிரிகள் ஆஜர்.**
**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் இருப்பு பாதை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 20.08.2017 ந் தேதி திண்டுக்கல் இருப்பு பாதை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியில் இருந்த போது இரவு 20.15 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனை புறக்காவல் நிலைய பெண் முதல் நிலைக் காவலர் சித்திரைச்செல்வி போன் மூலம் தொடர்பு கொண்டு இருப்பு பாதை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சங்கிலி கேட்டில் பணிபுரியும் கேட் கீப்பர் ஆனந்த் பாபு என்பவர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருப்பதாக சொன்ன தகவலை பெற்று அங்கு சென்று மு.நி.கா. பாலகிருஷ்ணனை அனுப்பி விசாரித்து புகாரினை பெற அனுப்பி

வைத்தேன். அவர் அங்கு சென்று சிகிச்சையில் இருந்த ஆனந்த் பாபு என்பவரை விசாரித்து புகார் மனு வாங்கி வந்தார். அந்த புகார் மனுவின் தன்மைக்கேற்ப இருப்பு பாதை காவல் நிலைய குற்ற எண். 120/2017 சட்டப்பிரிவுகள் 147,323,294(b),506(1) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பவமானது 28.10.2017 தேதியன்று நடந்தது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சம்பவமானது மாலை 17.00 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள், எங்கு வைத்து எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரில் எந்த விதமான சாட்சி கையொப்பமும் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதற்கு முன்போ, பின்போ காயம்பட்ட நபரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.டாடா சுமோவில் 15 நபர்கள் வந்ததாக புகாரிலும்,விபத்து பதிவேட்டிலும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் எதிரிகள் எந்த எந்த குற்ற செயலில் ஈடுபட்டார்கள் என்றும் அவர்களின் அடையாளங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் பாலகிருஷ்ணன் புகாரை பெறவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2025.07.31 10:18:51 +0530

Judicial Magistrate No.II

Dindigul.